26th March 1965]

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, மற்ற தலைவர்களுக்கு என்று செலவழிக்கக் கூடாது என்று கொள்கை இருக்கிறதா ? அமைச்சர் வருகிறபோது, பஞ்சாயத்து யூனியன் ரூ 30-ம், பஞ்சாயத்து ரூ. 10-ம் செலவழிக்கலாம் என்று இருக்கிறது. ஆனால், அமைச்சர் வருகையால் அந்த வட்டாரம் பயன் பெறும் என்று வரவழைக்கிறார்கள். அதன் காரணமாக ரூ. 200 வரை செலவாகிறது. ஆகவே, இந்த வரம்பை கொஞ்சம் கூட்டிக் கொடுக்க பரிசீலிக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இப்பொழுது ஒன்றும் உத்தேசம் இல்லை.

வேளாண்மைத்துறை அதிகாரத்தின்கீழ் தேனீ வளர்ப்புத் திட்டம்

*342 கேள்வி.—**திரு. வி. ஆர். பெரியண்ணன்**: கனம் நல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தேனீ வளர்ப்புத் திட்டத்தை விவசாயத் துறையின் கீழ் நடத்தும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தேனீ வளர்க்கப்பட்டு வருகிறதே, அதில் பஞ்சாயத்து யூனியனிலே தேனீயை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். ஒரு தேனீயை எடுத்து வர என்ன செலவு ஆகிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : விவரங்களுக்கு தனிக் கேள்வி போட்டால் அல்லது எழுதி அனுப்பினால் விவரம் கொடுக்கலாம். மூலக் கேள்வி விவசாயத் துறைக்கு மாற்றப்படுமா என்பது பற்றியது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, என்னுடைய பகுதியில், என்னிடம் கிராம சேவக் வந்து இந்தமாதிரி சொல்லுகிறார்கள். தேனீக்களே கிடைக்கவில்லை என்று, தேனீக்களைக் கொண்டு வர விவசாயிகளே ஏகப்பட்ட செலவில் செய்யவேண்டியிருக்கிறது. இப்படி எடுத்து வரும் செலவை சர்க்காரே ஏற்க வேண்டும் என்கிற கோரிக்கையை சர்க்கார் அமுல் செய்வார்களா என்றுதான் கேட்க வந்தேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: விவரங்கள் கொடுத்தால் பரிசீலிக்கலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, விவசாயிகள் தேனீ வளர்க்க விரும்புகிறார்கள். தகப்பனார் வளர்க்க வேண்டும் என்று விரும்பினால், அருமை பெருமை மிக்க பிள்ளையைக் கொட்டிவிடுகிறது. ஆகவே குடும்பத்தில் இது வேண்டாம் என்கிறார்கள். இதற்கு என்ன செய்வது ?

[26th March 1965

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: தேனீக்களிடம் ஜாக்கிரதையாக பழக வேண்டும். அதற்காக ட்ரெயினிங் கொடுக்கிறார்கள். கனம் அங்கத்தினர் விரும்பினால், அதைச் செய்யச் சொல்லலாம்.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—REQUEST FOR A HALF-HOUR DEBATE.

திரு. கே. ஏ. மதியழகன்: ஸார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பத்திரிகைகள் பேரில் எல்லாம் நடவடிக்கை எடுத்திருப்பது பற்றி, கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலை ஒட்டி ஒரு அரைமணி நேர விவாதம் செய்ய, ரூல் 40-ன் கீழே இன்றைக்கு அல்லது மறுநாள், அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பத்திரிகைகள் சுதந்திரம் பறிக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் கருணாநிதி கூட . . . .

கனம் சபாநாயகர்: அதெல்லாம் பற்றிப் பேசவேண்டாம். விஷயத்தைச் சொல்ல வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன்: இன்றைக்காவது, இப்பொழுதே கேள்வி நேரம் இன்னும் அரை மணி நேரம் பாக்கி இருக்கிறது, அல்லது நாளைக்காவது கனம் சபாநாயகர் அவர்களே பார்த்து இதன் மீது ஒரு அரை மணி நேர விவாதம் செய்ய அனுமதி கொடுக்க வேண்டும். இதிலே பல பிரச்சினைகள் இருப்பதால், அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலே தெளிவாகாத காரணத்தினால், பத்திரிகைகளின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டிருப்பதால் கனம் சபாநாயகர் அருள்கூர்ந்து இதை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, தகவல் இல்லை என்று கொடுக்காமல் இல்லை. இந்த விஷயம் ஸப்-ஜுடிஸ் ஆக இருக்கிறது, விசாரணையில் இருக்கிறது; ஆகவே அதற்கு மேல் ஒன்றும் சொல்வதற்கு இல்லை என்று சொன்னேன். அரைமணி நேர விவாதம் எடுத்துக் கொண்டாலும், கோர்ட்டிலே இருக்கிற விஷயம் பற்றி என்ன கூறமுடியும் என்றுதான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: As the Hon. the Leader of the House has stated that the matter is *sub judice*, I do not think any useful purpose will be served by a half-hour debate on the matter. If I allow a half-hour debate, discussion may take place on the details of the case which is said to be *sub judice*. Hence, I do not consider it necessary to allow a half-hour debate on this matter.